Judicial Form No.53

(See Rule 42)

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM

DATE: 27.05.2026

Case No : CrlMP.569/2026

Deposition of Witness : Witness No.2

| | |
|---|---|
| Name : திரு.சார்லஸ் ராஜா | Father/Husband Name : தாமஸ் |
| Age : 65 | Village : சொக்கன்குடியிருப்பு |
| Taluk : சாத்தான்குளம் | Calling: வியாபாரம் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on 27.05.2026

**சத்திய பிரமாண வாக்குமூலம்:-**

1. நான் தற்போது சென்னையில் வசித்து வந்து வியாபாரம் செய்து வருகிறேன். 2021 ஆம் ஆண்டு திருவிழாவிற்கு ஊருக்கு வந்தபோது, ஊரில் உள்ள பொதுபாதையில் பத்து லோடு கல்லை போட்டு வைத்திருந்தார்கள். 11.11.2021 அன்று தட்டார்மடம் காவல்நிலையத்தில் மேற்கூறிய சம்பவம் தொடர்பாக புகார்மனு ஊரில் உள்ளவர்கள் கொடுத்தார்கள். நானும் காவல்நிலையத்திற்கு நேரில் சென்று புகார் அளிக்க சென்றேன். கல்லை அப்புறப்படுத்த சொன்னோம். ஆனால் அவர்கள் அப்புறப்படுத்தவில்லை. 13.11.2021 ஆம் தேதி 10 ஆம் திருவிழா அன்று ஊர்க்கூட்டம் நடந்தபோது அதுபற்றி பேசி மறுபடியும் கல்லை அப்புறபடுத்த சொன்னோம். ஆனால் அப்புறப்படுத்தவில்லை. பிறகு பொதுகூட்டம் முடிந்து ஊர்மக்கள் சென்றுவிட்டோம். ஊரில் உள்ள மக்கள் எல்லோரும் சேர்ந்து கல்லை அப்புறப்படுத்தினோம். தட்டார்மடம் போலீஸ் வந்து சேர்ந்து செய்தார்கள்.

2. எங்களுக்கும் எங்கள் ஊரில் உள்ள மற்றொரு தரப்பினருக்கும் பல ஆண்டுகளாக பிரச்சனை இருந்து வருகிறது. சர்வே எண் 64 உள்ள மேற்படி இடத்தை ஆக்கிரமிப்பு செய்வதற்கு எதிரிகள் முயற்சி செய்து கொண்டுள்ளார்கள். நீதிமன்றத்தில் வழக்கு பதிவு செய்தும் RDO விடம் சென்று மனு அளித்தனர். RDO அவர்கள் வந்து விசாரித்தார்கள். கல்லை யார் அந்த இடத்தில் போட்டார்களோ அவர்களே அப்புறப்படுத்த வேண்டும் என்று கூறினார்கள். எதிரிகள் அவர்களின் மேல் புகார் எதுவும் நிலுவையில் இல்லாததனால் தொடர்ந்து ஊர் திருவிழாக்களிலும், ஊர்பொதுக்கூட்டத்திலும் வந்து மேலும் மேலும் தொடர்ந்து பிரச்சனை செய்து வருகிறார்கள். அவர்கள் எங்கள் தரப்பினர் மேல் பொய்புகாரும் கொடுத்துள்ளார்கள். எனவே, எதிரிகள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கும் படி கேட்டுக்கொள்கிறேன்.

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

DEVI RAKSHA M V

Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.05.27 18:50:04 +0530

Judicial Magistrate, Sathankulam.